**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 40/2015**

**Deposition of P.W.6**

Name : திரு. கமலி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:25.02.2026

Accused absent. Petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் கன்னியாகுமரி மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். தக்கலை மதுவிலக்கு அமலாக்க பிரிவு பொறுப்பு காவல் ஆய்வாளராகவும் பணியாற்றி வருகிறேன். கடந்த 23.10.2003ம் தேதி அன்று தக்கலை மதுவிலக்கு காவல்நிலைய குற்ற எண். 712/2003 பிரிவு 4(1) (aaa) and 14A TNP Act வழக்கின் முதல் தகவல் அறிக்கையை அப்போதைய உதவி ஆய்வாளர் திரு. ராஜாராம் என்பவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்குச் சொத்துக்களை கைப்பற்றியும், எதிரிகளை கைது செய்தும் முதல் விசாரணை செய்து வைத்திருந்த வழக்கு கோப்பை அப்போதைய காவல் ஆய்வாளர்கள் திரு. ரெகுநாதன், திரு. ஜெயசுப்பிரமணியம் ஆகியவர்கள் விசாரணை செய்து இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி இருகாவல்

ஆய்வாளர்களும் பணி ஓய்வு பெற்று எங்கு வசித்து வருகிறார்கள் என்ற விபரம் தெரியாத காரணத்தால் வழக்கு கோப்பின் அடிப்படையில் என்னால் சாட்சியம் அளிக்க முடியும். வழக்கு கோப்பை பெற்றுக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு. ரெகுநாதன் சாட்சிகள் இன்பராஜ், குணராஜ், கோபாலன் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு சொத்தை பகுப்பாய்விற்கு அனுப்பி பகுப்பாய்வு அறிக்கையை பெற்றுள்ளார். பகுப்பாய்வு அறிக்கை கொடுத்த அறிவியல் அலுவலர் திருமதி. பத்மா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவர் பணிமாறுதல் பெற்று சென்ற உடன் அதன் பின்னர் வந்த காவல் ஆய்வாளர் திரு. ஜெயசுப்பிரமணியன் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு பகுப்பாய்வு அறிக்கையை மருத்துவர் திரு. ராஜேஷ் அவர்களிடம் வழங்கி மது கஷாயத்தில் அட்ரோபின் பாதிப்பு குறித்து அறிக்கை பெற்றுள்ளார் அவரை விசாரித்து அறிக்கை பெற்றுள்ளார். அந்த அறிக்கை அ.சா.ஆ.4. பின்னர் விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>

பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.